**O .S. 79/2017 05.12.2020, 11.25 am**

**வா.சா.1, ராமன், த/பெ.மாணிக்கம்**

சாட்சி முதல் விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை தொடர்ச்சி:-**

வாதியின் பெயரிலுள்ள குடும்ப அட்டை வா.சா.ஆ.36 ஆகும். வாதியின் பெயரிலுள்ள ஆதார் அட்டை வா.சா.ஆ.37 ஆகும். வாதி மகன் சேஷாத்ரி பெயரிலுள்ள பாஸ்போர்ட் வா.சா.ஆ.38 ஆகும். மேற்கண்ட ஆவணங்கள் அனைத்து அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:- 12.00 pm - 12.50 pm**

வாதி என்னுடைய மனைவி ஆவார். நானும், எனது மனைவியும் ஒன்றாகதான் வாழ்ந்து வருகிறோம். எனக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் ஒரு பெண் பிள்ளை. பெண்பிள்ளை திருமணமாகி சென்னையில் வசிக்கிறார். நான் செட்டியப்பனூரில் வசித்து வருகிறேன். எனக்கு ஒரு வீடுதான் உள்ளது. அந்த வீட்டில்தான் நாங்கள்தான் வசித்து வருகிறோம். என்னுடைய அப்பா பெயர் மாணிக்க முதலியார். அவர் என்ன வியாபாரம் செய்து வந்தார் என்றால் பாக்கு வியாபாரம் கிட்டத்தட்ட 40 வருடங்களாக செய்து வந்தார். அதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு எண்.598/1979 என்ற வழக்கை பக்கிரிசாமி யார்மீது தாக்கல் செய்தார் என்றால் திருச்சூரில் மாணிக்கம் என்பவர் மீது தாக்கல் செய்தார். மாணிக்க முதலியாருக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் 4 ஆண் பிள்ளைகள், 1 பெண் பிள்ளை ஆவார். திருச்சூரில் வழக்கு நடந்த விவரம் எனக்கு தெரியாது. திருப்பத்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனு எவ்வாறு தெரியவந்தது என்றால் வசூலுக்கு வரும் சமயத்தில் தெரியவந்தது. அழைப்பாணை ஏதேனும் சார்வு செய்யப்பட்டதா என்றால் சார்வு செய்யப்பட்டது. அழைப்பாணை எனக்கு மட்டும்தான் சார்வு செய்யப்பட்டது. திருப்பத்தூரில் யார் யார்மீது நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் என் மீது மட்டும்தான் தாக்கல் செய்யப்பட்டது. வா.சா.ஆ.19-ல் யாருடைய பெயர் உள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து என்னுடைய பெயர் மட்டும்தான் உள்ளது என்று சாட்சியம் அளித்தார். வா.சா.ஆ.20-ல் சொத்து விவரம் உள்ளதா என்றால் இல்லை. சொத்தின் மீது ஏலம் ஏதேனும் விட்டார்களா என்றால் தண்டோரா மட்டும்தான் போடப்பட்டுள்ளது. நான் Chief Executive Officer, Executive Officer, sale Officer, Co-operative Secretary அவர்கள்மீது தாக்கல் செய்த வழக்கு என்ன நடந்தது என்றால் நான் பணம் செலுத்தி முடித்துவிட்டேன். வா.சா.ஆ.22-ன்படி அந்த வழக்கு நீதிமன்றத்தில் வாதி ஆஜராகததால் தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.22-ல் சொத்து விவரத்தில் வீடு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு நீங்கள் வீடு குறிப்பிடவில்லை நிலத்தைதான் குறிப்பிட்டுள்ளீர்கள் தற்பொழுது பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. Co-operative society-ல் எந்த கடன் பெற்றுள்ளீர்கள் என்றால் நான் பெறவில்லை மாணிக்கம் என்பவர்தான் இரண்டு கடன்

பெற்றுள்ளார். அந்த கடனை நான்தான் தீர்த்தேன். மேற்படி கடன்களை மாணிக்கம் என்பவர்தான் அடைத்தார் நீங்கள் அடைத்ததாக தவறாக கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 1992-ல் கலந்திரா தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நீங்கள் கடன் வாங்கினீர்களா என்றால் வாங்கினேன். வா.சா.ஆ.24 ஆன அறிவிப்பு என்னுடைய பெயருக்கு வந்துள்ளதா என்றால் சரிதான், ஆனால் மாணிக்கம் வாங்கிய கடனுக்கு என் பெயரில் வந்துள்ளது. மாணிக்கம் பெற்ற கடன் எண் வேறு, நான் பெற்ற கடன் எண் வேறு அதனால் நீங்கள் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.27-ல் வரிவிதிப்பு எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், கதவு எண் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.28(வரிசை)-லும் வரிவிதிப்பு எண் ஏதும் இல்லை என்று சொன்னால் இல்லை, அதில் தொகை மட்டும்தான் குறிப்பிடப்படும். 1996, 1997 வருடத்தில் என்னுடைய பெயரில் வரிவிதிப்பு வந்துள்ளதா என்றால் குடிநீர் வரி ரசீது என் பெயரில் வந்துள்ளது. மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் 1988-லிருந்து என்னுடைய மனைவி பெயரில் உள்ளது. 1988-ற்கு முன் அந்த வீட்டில் மின் இணைப்பு உள்ளதா என்றால் வீடு இல்லை, மின் இணைப்பு இல்லை. சாட்சி தற்பொழுது வீடு இருந்தது, மின் இணைப்பு இல்லை என்று குறிப்பிடுகிறார். வீடு எப்பொழுது கட்டப்பட்டது என்றால் 1979-ல் கட்டப்பட்டது. அந்த சமயத்தில் மின் இணைப்பு கிடையாது. மேற்படி வீட்டிற்கு 1988-ல் முதன்முதலில் மின் இணைப்பு பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வீட்டில் மாணிக்கம் என்பவர் இருந்த சமயத்திலிருந்தே மின் இணைப்பு இருந்தது, நீங்கள் தவறுதலாக கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக வா.சா.ஆ.33 ஆவணத்தை தயார் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.34 ஆவணங்கள் வழக்கிற்கு பின்பு பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வீடு இருக்கும் இடத்திற்கு தெரு பெயர் என்னவென்றால் கீழ்தெரு அல்லது ராஜவீதி என்று குறிப்பிடுவார்கள், அவ்வாறு அந்த தெரு பெயர் நீங்கள் தாக்கல் செய்த வா.சா.ஆ.36 இல்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்து சம்மந்தமாக கூர்சீட்டு ஏதேனும் எழுதினார்களா என்றால் எழுதியுள்ளார் ஆனால் தற்பொழுது கையில் இல்லை. அந்த கூர்சீடடில் யார் யார் பாகம் பிரித்து கொண்டதார்கள் என்றால், முனிரத்தினம், வடிவேல், நான் மற்றும் ஆனந்தன் பாகம் பிரித்து கொண்டார்கள். ,அந்த கூர்சீட்டை யார் தயாரித்தார் என்றால் செட்டியப்பனூரில் எழுத்தர எழுதினார். அந்த கூர்சீட்டில் என்னுடைய அம்மா பெயர் இருந்ததா என்றால் இருந்தது. கூர்சீட்டு எழுதும் சமயத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் வடிவேல் என்பவர் இல்லை அதற்கு பதில் விவேகானந்தர் இருந்தார். வடிவேல் என்பவர் விவேகானந்தர் என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிகொடுத்தாரா என்றால் ஆமாம், அது எந்த வருடம் என்று எனக்கு தெரியாது. அந்த கூர்சீட்டில் இந்த வழக்கு சொத்து பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி தெரியாது. அந்த கூர்சீட்டில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் என்று ஒதுக்கப்பட்டதா என்றால் ஒதுக்கப்பட்டது. அந்த கூர்சீட்டின்படி பிரித்துகொண்டு அவரவர்கள் பாகத்தை தனித்தனியாக அனுபவித்தார்களா என்றால் அனுபவித்தோம். அந்த கூர்சீட்டின் அசல் எங்குள்ளது என்றால் வழக்கில் உள்ளது, எந்த வழக்கு என்றால் தெரியாது. மேற்படி கூர்சீட்டை வழக்கில் தாக்கல் செய்ய சொல்லி யார் வழக்கறிஞரிடம் கொடுத்தார்கள் என்றால் நான்தான் கொடுத்தேன். அந்த கூர்சீட்டு எழுதியது பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த கூர்சீட்டு

எழுதும்பொழுது ஆனந்தன் என்பவருக்கு திருமணம் ஆகவில்லை என்று சொன்னால் சரிதான். ஒருவருடத்திற்குள் அந்த கூர்சீட்டை பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று உள்ளது ஆனால் அவ்வாறு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல, நான் பதிவு செய்தேன். அந்த பதிவு செய்யப்பட்ட கூர்சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. அந்த கூர்சீட்டின்படி எனக்கு எந்த பாகம் பெறப்பட்டது என்றால் பி அட்டவணை சொத்து பெறப்பட்டது. அந்த கூர்சீட்டின்படி அவரவருடைய கடன் அவர்கள்தான் அடைக்க வேண்டும் எழுதப்பட்டிருந்ததா என்றால் சரிதான். வழக்கு சொத்து கூர்சீட்டின் பாகத்தில் வந்துள்ளதா என்றால் வரவில்லை. எனக்கு வந்த பாகத்தை சுசீலா, குப்புசாமி என்பவர்களுக்கு விற்றீர்களா என்றால் நீங்கள் கேட்கும் கேள்வி தவறு சரியல்ல. வாய்மொழியாக பாகம் ஒதுக்கப்பட்டதாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது சரியா என்றால் சரிதான். கூர்சீட்டு எழுதும் சமயத்தில் வாய்மொழியாக ஒதுக்கப்பட்ட பாகம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடவில்லை. வழக்கு சொத்து அனைத்தும் மாணிக்க முதலியார் சம்பாரித்த சொத்து என்றால் சரிதான். குப்புசாமிக்கு விற்ற சொத்தை மீண்டும் என்னுடைய மகன் மற்றும் மகளுக்கு செட்டில்மெண்ட் எழுதிகொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை சேர்த்து விற்பனை செய்வதற்காக இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியை ஏமாற்றுவதற்காக என் மனைவியின் பெயரில் செட்டில்மெணட் செய்து அதை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பட்டா வாதியின் பெயரில் உள்ளதா என்றால் பட்டா வாங்கவில்லை. என்னுடைய அண்ணன் தற்பொழுது உடல்நிலை சரியில்லாமல் நடக்கும்நிலையில் இல்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய அண்ணன் வடிவேல் (பிரதிவாதி) அவர் என்ன வேலை செய்துகொண்டிருந்தார் என்றால் டெல்லியில் வேலையில் இருந்தார். கூர்சீட்டின் அடிப்படையில்தான் பாகம் வந்தது என்றும், தனியாக வாய்மொழி பாகமாக வரவில்லை என்றும், நீங்கள அதை ஏமாற்றி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.